<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 17/2022 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | மணிகண்டன் | நாள் | 04.12.2024 |
| தகப்பனார் பெயர் | சுப்ரமணி | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

9) காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில், மேற்படி புகாரை எழுதிய நபர் யார் என எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி புகாரை என் பாட்டி நேரடியாக காவல் நிலையம் சென்று அளித்தாரா என்றால், என் பாட்டி நேரடியாக வரவில்லை. அவர் சார்பாக என் தந்தை, என் சித்தப்பா மற்றும் அக்கம் பக்கத்திலுள்ள சில நபர்கள் சென்று அளித்தனர்.

10) மேற்படி புகாரின் அடிப்படையில் காவல் நிலையத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தொடர்பான ஆவணங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளோமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிகள் 0.1 சென்ட் நிலத்தை தங்களுக்கு கிரயம் கொடுக்கவேண்டும் என கூறியதாக நான் சொல்லியுள்ள நிலையில், குறிப்பாக எந்த தேதியில் அவ்வாறு சொன்னார்கள் என்றால், குறிப்பாக தேதி எனக்கு தெரியாது.

11) இவ்வழக்கில் என்னென்ன ஆவணங்களை வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், வீட்டுவரி ரசீது, மின் கட்டண ரசீது, கந்தாய ரசீது மற்றும் மேலும் சில ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனர் என்பது மட்டும் எனக்கு தெரியும். இவ்வழக்கில் எந்த பிரதிவாதி பதில் தாக்கல் செய்துள்ளார். யார் அதை ஏற்றுக்கொண்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், மாதேஸ் என்பவர் பதில் போட்டுள்ளார். (சாட்சி தற்போது யார் பதில் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தனக்கு தெரியாது என கூறுகிறார்.)

12) பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி

சங்கதிகள் குறித்து எனக்கு தெரியாது என்றாலும், நான் மேற்படி சங்கதிகள் குறித்து தெரியாத நிலையில், அது தொடர்பாக என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானவை என்றாலும், சரியல்ல. அ.வ.எண்.49/2022 என்ற வழக்கில் எத்தனை பேர் வாதிகள். எத்தனை பேர் பிரதிவாதிகள் என்றால், மேற்படி விவரம் எனக்கு தெரியாது.

13) என் பாட்டி எந்தெந்த அலுவலத்தில், எந்தெந்த தேதியில் மனு அளித்தார் என எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், கடந்த 10.03.2021ம் தேதியில் பஞ்சாயத்து அலுவலகத்தில் தனிப்பட்டாவிற்கு மனு அளித்தார். கடந்த 28.11.2021ம் தேதியில் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். மேற்படி சங்கதிகள் மட்டும் தான் எனக்கு தெரியும். மேற்படி நிலத்தை சர்வேயர் அளந்து, அறிக்கை அளித்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

14) தாவா சங்கதிகள் குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும், மேற்படி தாவா சொத்து எவ்வாறு கிரயம் பெறப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றாலும், என் தந்தை சொல்லியதன் பேரில் நான் நீதிமன்றத்தில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றாலும், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டுர்.